தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 144/மா/2026

நாள்: 14.10.2026

மூ. ஈஸ்வரன்,
சிவகாசி–626 130 --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
சிவகாசி மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல், வையன் வீதி, கதவு எண் 25 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மூ. ஈஸ்வரன் என்பவரின் 23.05.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.05.2026 அன்று பெறப்பட்டு 144/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல், வையன் வீதி, கதவு எண் 25 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் தனது 23.05.2026 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"உயர்திரு முறைமன்ற நடுவச் செயலர் அவர்களுக்கு, விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், சிவகாசி மாநகராட்சிக்கு உட்பட்ட திருத்தங்கல் வருவாய் கிராமத்தில் புல எண் 1237 என்பது ஊரணி என்று கிராம கணக்கில் தாக்கல் ஆகி உள்ளது. தற்போது மேற்கண்ட ஊரணியில் நீர்வழித் தடங்களை ஆக்கிரமிப்பு செய்து சில தனி நபர்கள் வீடுகள் கட்டி உள்ளனர். இதனால் ஊரணிக்கு வரவேண்டிய மழைநீர் முற்றிலும் தடை செய்யப்பட்டதோடு, கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர் மற்றும் நிலத்தடி நீர் மட்டும் வெகுவாக குறைந்து தற்போது ஊரணி தண்ணீர் இல்லாமல் இருக்கின்றது. மேற்கண்ட ஊரணியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி கடந்த 02.09.2023 அன்று சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு புகார் தெரிவித்து இருந்தேன். அதே போல் கடந்த 11.05.2026 அன்று விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடமும் புகார் தெரிவித்து இருந்தேன். அதேபோல் தங்களிடம் கடந்த 28.04.2026 அன்று புகார் தெரிவித்து இருந்தேன்.

ஆனால் மேற்கண்ட அதிகாரிகள் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளது. எனவே மேற்கண்ட அதிகாரிகள் இம்மேல்முறையீட்டு மனு மீது உடனடியாக நடவடிக்கை உத்தரவு இடுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 17.06.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் எவ்வித அறிக்கையும் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரிடமிருந்து பெறப்படவில்லை.

3. இருப்பினும், மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.09.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.08.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பிய பின்னர், சிவகாசி மாநகராட்சி ஆணையாளர் தனது 03.09.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 3495/2026/எப்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அவர்களின் முறையீட்டு மனுவில் மனுதாரர் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் சர்வே எண் 1237 என்பது ஊரணி என்று தாக்கலாகி உள்ளதால் ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரியுள்ளார். மேற்படி இடம் வருவாய்த்துறைக்கு பாத்தியப்பட்ட ஊரணி ஆகும். மேற்படி இடம் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் W.P.(MD) No.16289/2026ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கின் 18.06.2026ம் தேதிய உத்தரவில் சிவகாசி வருவாய் வட்டாட்சியரை ஆக்கிரமிப்பு அகற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அனுமதியற்ற கட்டுமானமாக உறுதி செய்யப்பட்டால் மாநகராட்சியையும் தன்னிச்சையாக, நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி வருவாய் வட்டாட்சியர், சிவகாசி அவர்களின் செயல்முறைகள் ந.க. ஆ1/3–15/2026, நாள் 31.07.*2026ந்தேதிய* உத்தரவில், 06.08.2026 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற தேதி நிர்ணயம் செய்யப்பட்டது. அதில் உரிய ஒத்துழைப்பு வழங்க கோரி சிவகாசி மாநகராட்சி அலுவலகத்திற்கு கடிதம் வரப்பெற்றுள்ளது. பின்னர் மேற்கண்ட இடத்தில் வழிபாட்டு தலமான கருப்பசாமி கோவில் அமைந்துள்ளதால் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு பொதுமக்கள் வருவாய் வட்டாட்சியர், சிவகாசி அவர்களிடம் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதால், வருவாய் வட்டாட்சியர், சிவகாசி அவர்களிடம் இருந்து ஆக்கிரமிப்பு அகற்றும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் மேற்படி இடத்தில் அமையப்பட்டுள்ள கட்டுமானம் அனுமதியற்ற கட்டுமானமாக கண்டறியப்பட்டது. அனுமதியற்ற கட்டிடம் கட்டியவர்களுக்கு மாநகராட்சி மூலம் நகர் ஊரமைப்பு சட்டத்தின்படி உரிய அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு மாநகராட்சியின் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

5. மனுதாரர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.09.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரர் தரப்பில் சிவகாசி மாநகராட்சி உதவிப் பொறியாளர் (திட்டம்) 10.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் சர்வே எண்.1237 என்பது ஊரணி என்று தாக்கலாகி உள்ளதால் ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரியுள்ளார். மேற்படி இடம் வருவாய்த்துறைக்கு பாத்தியப்பட்ட ஊரணியாகும். மேற்படி இடம் குறித்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் W.P.(MD) No.16289/2026ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 18.06.2026ம் நாளிட்ட உத்தரவில் சிவகாசி வருவாய் வட்டாட்சியரை ஆக்கிரமிப்பு அகற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அனுமதியற்ற கட்டுமான கட்டிடம் என்று உறுதி செய்யப்பட்டால் சிவகாசி மாநகராட்சியும் தன்னிச்சையாக நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி வருவாய் வட்டாட்சியர், சிவகாசி அவர்களின் செயல்முறைகள் 31.07.2026 நாளிட்ட உத்தரவில், 06.08.2026 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற மேற்கண்ட தேதி நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்கண்ட இடத்தில் வழிபாட்டு தலமான கருப்பசாமி கோவில்

அமைந்துள்ளதால் ஆக்கிரமிப்பினை அகற்ற பொதுமக்கள், சிவகாசி வருவாய் வட்டாட்சியர் அவர்களிடம் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதால், சிவகாசி வருவாய் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து மறு தேதி பெறப்பட்டபின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் மேற்படி இடத்தில் ஒரு கட்டுமானம் அனுமதியற்ற கட்டுமானமாக கண்டறியப்பட்டதால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன்படி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. மற்ற இரண்டு பழைமையான கட்டிடங்களுக்கு வருவாய்த் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட கோயில் கட்டுமானம் தொடர்பாக சிவகாசி வருவாய் வட்டாட்சியரிடமிருந்து ஆக்கிரமிப்பு தொடர்பாக மறு தேதி குறிப்பிட்டு பெறப்படும் அறிக்கையின் அடிப்படையிலும், அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக சிவகாசி மாநகராட்சியால் ஏற்கனவே தாக்கீது வழங்கப்பட்டது தொடர்பாகவும், உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வு வழக்கு எண் W.P.(MD) No.16289/2026ல், 18.06.2026 நாளிட்ட தீர்ப்பின் நகலினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, எதிர்மனுதாரரான சிவகாசி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர் (திட்டம்)–ன் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சிவகாசி மாநகராட்சிக்கு உட்பட்ட திருத்தங்கல் வருவாய் கிராமத்தில் புல எண்.1237 என்பது ஊரணி என்று கிராம கணக்கில் தாக்கலாகி உள்ள இவ்வூரணி உள்ள நீர்வழித்தடங்களை ஆக்கிரமிப்பு செய்து சில தனி நபர்கள் வீடுகள் கட்டி உள்ளனர் என்பதும், இதனால் ஊரணிக்கு வரவேண்டிய மழைநீர் முற்றிலும் தடை செய்யப்பட்டதோடு இல்லாமல் கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து தற்போது ஊரணி தண்ணீர் இல்லாமல் இருக்கின்றது என்பதும், மேற்கண்ட ஊரணியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி 02.09.2023 நாளிட்ட மனுவினை சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கும் மற்றும் 11.05.2026 நாளிட்ட மனுவினை விருதுநகர் மாவட்ட ஆட்சியருக்கும் புகார் தெரிவித்தும், மேற்கண்ட சிவகாசி மாநகராட்சி அதிகாரிகள் மனுதாரர் மனு மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்காததால், மேற்கண்ட புகார் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சிவகாசி மாநகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.1237 என்பது ஊரணி என்று தாக்கலாகி உள்ளதால் ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரிய மேற்படி இடம் வருவாய்த்துறைக்கு பாத்தியப்பட்ட ஊரணியாகும் என்பதும், இவ்விடம் குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் வழக்கு எண் W.P.(MD) No.16289/2026ல் மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கு மீதான 18.06.2026ம் நாளிட்ட உத்தரவில், சிவகாசி வருவாய் வட்டாட்சியரை மேற்கண்ட ஊரணியில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றுவதற்கும் மற்றும் அவ்விடத்தில் அனுமதியற்ற கட்டுமான கட்டிடம் உள்ளது என்று உறுதி செய்யப்பட்டால் சிவகாசி மாநகராட்சி தன்னிச்சையாக நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், அதன்படி சிவகாசி வருவாய் வட்டாட்சியரின் செயல்முறைகள் 31.07.2026 நாளிட்ட உத்தரவில், 06.08.2026 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற மேற்கண்ட தேதி நிர்ணயம் செய்யப்பட்டது என்பதும், மேற்கண்ட இடத்தில் வழிபாட்டு தலமான கருப்பசாமி கோவில் அமைந்துள்ளதால் ஆக்கிரமிப்பினை அகற்ற பொதுமக்கள், சிவகாசி வருவாய் வட்டாட்சியரிடம் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதால், சிவகாசி வருவாய் வட்டாட்சியரிடமிருந்து மறு தேதி பெறப்பட்டபின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

என்பதும், மேற்படி இடத்தில் ஒரு கட்டுமானம் அனுமதியற்ற கட்டுமானமாக கண்டறியப்பட்டதால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன்படி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதும், மற்ற இரண்டு பழைமையான கட்டிடங்களுக்கு வருவாய்த் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், மேற்கண்ட கோயில் கட்டுமானம் தொடர்பாக சிவகாசி வருவாய் வட்டாட்சியரிடமிருந்து ஆக்கிரமிப்பு தொடர்பாக மறு தேதி குறிப்பிட்டு பெறப்படும் அறிக்கையின் அடிப்படையிலும், அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக சிவகாசி மாநகராட்சியால் ஏற்கனவே தாக்கீது வழங்கப்பட்டது தொடர்பாகவும், உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர் (திட்டம்)–ன் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சிவகாசி மாநகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.1237ல் உள்ள ஊரணி வருவாய்த்துறைக்கு பாத்தியப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் வழக்கு எண் W.P.(MD) No.16289/2026ல் 18.06.2026ம் நாளிட்ட உத்தரவில் கண்டுள்ளவாறு உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. மூ. ஈஸ்வரன்,
கதவு எண் 25, வையன் வீதி,
திருத்தங்கல், சிவகாசி வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

(2) ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

16/10/26
செயலாளர்.

16/10/26